(2) அவையுரிமைக் கேள்வி.

**திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கூறுத கூற்றைக் கூறியதாகக் கூறியதுகுறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையையொட்டி கருத்து வழங்குகிற நேரத்திலே இந்த மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் கூறுதஒன்றைக் கூறினார்கள் என்றும் ஆனால் அந்த நிலையைப் பிறகு எடுத்துக்கூறுகின்றநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் இந்த அவையில் இல்லாத காரணத்தினால் அதற்கு அவர் இடத்திலிருந்து சமாதானம் பெற்று அதன்மீது முடிவு எடுக்கலாம் என்றும் இந்த அவைக்கு அறிவித்திருந்தேன். அவர்களுக்கு அந்த வாய்ப்பு அளித்தபோது அவர்கள் சமாதானம் ஏதும் கூறுத காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் கூறுத கூற்றைக் கூறியதாக அவர்கள் இந்த அவையிலேயே கூறியது உண்மையிலேயே உரிமை மீறிய நிகழ்ச்சியாகும் என்ற முடிவுக்கு வருகிறேன். ஆராய்ந்து முடிவுகூற அந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு நான் அனுப்புகின்றேன்.

(3) கவன ஈர்ப்பு.

**(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் கடன் வசூலை நிறுத்துவது, தவணையை நீட்டிப்பதுகுறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஓர் அவசர உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தைக் கொண்டுவருவார்கள்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ், இராமநாதபுரம் மாவட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் வாங்கிய கடன் தொகையை வசூலிப்பதை நிறுத்தவும், தவணைகளை நீட்டிக்கவும் வேண்டியதுபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** Sir, in February 1970 the Collector of Ramanathapuram had reported that due to failure of rains again, acute distress prevailed in several pockets in the district and requested among other things, that collection of Government dues might be postponed in such areas to afford relief.

The Government accepted the Collector's view and have since issued orders permitting the Collector to postpone collection of all Government loan instalments and land revenue dues during the current fasli in the following areas which were reported as worst affected :—

Srivilliputhur taluk—Nathampatti, Srivilliputhur and Malli firkas.

Aruppukkottai taluk—Tiruchuli firka.

Tirupathur taluk—Nachiapuram and Singampunari firkas.

However, these orders will not prevent the Collector from using his discretion in extending the concession to similarly affected parts in the district under intimation to Government.